| | |
|---|---|
| PLACE | THIRUNAGAI |
| PRESENT NAME | NAGAPATTINAM |
| BASE TOWN | THIRUVARUR |
| DISTANCE | 30 KM |
| MOOLAVAR | NEELAMEGAPERUMAL |
| THIRUKKOLAM | NINDRA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | SOUNDHARYARAJAN |
| THAYAR | SOUNDHARYAVALLI |
| MANGALASASANAM | 10 PAASURAMS |
| PRATYAKSHAM | THIRUMANGAI AZHWAR |
| THEERTHAM | SARA PUSHKARANI |
| VIMANAM | SOUNDHARYA VIMANAM |
| NAMAVALI | Sri Soundaryavalli nayiga sameda Sri Neelamega parabramane namaha |
| STHALA VIRUKSHAM | MAA MARAM ( MANGO TREE ) |





**GOPURA DARSHANAM**

## STHALA PURANAM:

உத்தான பாத மகாராஜனின் குமாரன் துருவன். சிறுவனான இவன் நாரதர் மூலம் இத்தலத்தின் பெருமையை அறிந்தான். உலகம் முழுவதும் தனக்கே அடிமையாக வேண்டும்

என்று பெருமாளை குறித்து தவம் செய்தான். இவனது தவத்தை கலைக்க தேவர்கள் இடைஞ்சல் செய்தனர். இருப்பினும் தவத்தை வெற்றிகரமாக முடித்த துருவன் முன்பு பெருமாள் கருடன் மீது அமர்ந்து பேரழகு பொருந்தியவராக தரிசனம் தந்தார். பெருமாளின் பேரழகில் மயங்கிய துருவன் தான் கேட்க வந்த வரத்தை மறந்தான். இறைவனது பேரழகே போதும். இதில் தான் உண்மையான சுகம் இருக்கிறது. அந்த பேரழகை எப்போதும் தரிசிக்கும் பாக்கியத்தை தர வேண்டும் என பெருமாளிடம் கேட்டான். பெருமாளும் தனது சவுந்தரியமான திருக்கோலத்தை துருவனுக்கு காட்டி அவன் தவமிருந்த தலத்திலேயே தங்கினார். அழகான இவர் "சவுந்தரராஜப் பெருமாள்' என்றழைக்கப்படுகிறார்.



**UTHSAVAR**



**THAAYAAR**

நாகங்களுக்கெல்லாம் தலைவனான ஆதிசேஷன் இத்தலத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அதற்கு "சாரபுஷ்கரணி' என்று பெயரிட்டு அதன் கரையில் அமர்ந்து பெருமாள் குறித்து தவமிருந்தார். பெருமாளும் மகிழ்ந்து தனது படுக்கையாக ஏற்றுக்கொள்வதாக இத்தலத்தில் அருள்புரிந்தார். நாகம் (ஆதிசேஷன்) பெருமாளை ஆராதித்ததால் அவரது பெயராலேயே இவ்வூர் நாகப்பட்டினம் ஆனது.



**SOUNDARYA VIMANAM**



**ASHTA BUJA NARASIMHAR**

தசாவதாரங்களை விளக்கக்கூடிய செம்பு தகட்டாலான மாலை பெருமாளின் இடையை அலங்கரிப்பதை பார்க்க புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆதிசேஷனால் உண்டாக்கப்பட்ட சாரபுஷ்கரிணியில் நீராடி பெருமாளை வழிபட்டால் அவர்கள் சூரிய மண்டலத்தை

9 பாசுரங்களை பாடிவிட்டு பத்தாவது பாடலில் தான் இத்தலத்தின் பெயரை குறிப்பிடுகிறார். கண்டன் , சுகண்டன் என்ற இரு அந்தண சகோதரர்கள் நிறைய கொடுஞ்செயல் புரிந்து வந்தார்கள். ஒருநாள் இவர்கள் சார புஷ்கரிணியில் நீராடினார்கள். உடனே அவர்கள் பாவம் நீங்கி வைகுண்டம் சென்றார்கள். இவர்களது சிற்பங்களை பெருமாள் சன்னதியில் வைத்துள்ளார்கள்.

இங்கு பெருமாள் கிழக்கு பார்த்து நின்ற திருக்கோலத்தில் திருமஞ்சன திருமேனியுடன் காட்சி தருகிறார். இங்குள்ள விமானம் சவுந்தர்ய விமானம். இங்கு ஆதிசேஷன் , துருவன் , திருமங்கையாழ்வார் , சாலிசுக சோழன் ஆகியோர் இத்தல பெருமாளை தரிசனம் செய்துள்ளனர்.பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் , திருக்குருகைப்பெருமான் கவிராயர் , முத்துச்சாமி தீட்சிதர் ஆகியோரின் பாடல்கள் இப்பெருமாளின் பேரழகைப் பாடுகின்றன.

நான்கு யுகம் கண்ட இப்பெருமாள் நின்ற , கிடந்த , இருந்த கோலத்தில் அருள்பாலிக்கிறார். நரசிம்மர் இங்கு எட்டு கரத்துடன் அஷ்டபுஜ நரசிம்மராக அருள்பாலிக்கிறார். ஒரு கை பிரகலாதனை ஆசிர்வதிப்பது போலவும் , ஒரு கை அபய முத்திரையையும் காட்டுகிறது. மற்ற கைகள் இரண்யனை வதம் செய்கின்றன.

| **திவ்யதேசம் 021**<br>**திருநாகை (நாகைப்பட்டினம்)** | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1758-1767 |
| மொத்த பாசுரங்கள் | 10 |

**திருமங்கையாழ்வார்**

**திருநாகை: அச்சோப்பதிகம்**

**தலைவனது உருவெளிப்பாட்டில் நலியும் தலைவி தோழியிடம் கூறுதல்**

1758 பொன் இவர் மேனி மரகதத்தின் பொங்கு இளஞ் சோதி அகலத்து ஆரம்
மின் இவர் வாயில் நல் வேதம் ஓதும் வேதியர் வானவர் ஆவர் தோழீ
என்னையும் நோக்கி என் அல்குல் நோக்கி ஏந்து இளங் கொங்கையும் நோககுகின்றார்
அன்னை என் நோக்கும் என்று அஞ்சுகின்றேன்-அச்சோ ஒருவர் அழகியவா (1)

1759 தோடு அவிழ் நீலம் மணம் கொடுக்கும் சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த
சேடர்கொல் என்று தெரிக்கமாட்டேன் செஞ் சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி
பாடக மெல் அடியார் வணங்க பல் மணி முத்தொடு இலங்கு சோதி
ஆடகம் பூண்டு ஒரு நான்கு தோளும்-அச்சோ ஒருவர் அழகியவா (2)

1760 வேய் இருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த மெய்ய மணாளர் இவ் வையம் எல்லாம்
தாயின நாயகர் ஆவர் தோழீ தாமரைக் கண்கள் இருந்த ஆறு
சேய் இருங் குன்றம் திகழ்ந்தது ஒப்பச் செவ்விய ஆகி மலர்ந்த சோதி
ஆயிரம் தோளொடு இலங்கு பூணும்-அச்சோ ஒருவர் அழகியவா (3)

1761 வம்பு அவிழும் துழாய் மாலை தோள்மேல் கையன ஆழியும் சங்கும் ஏந்தி
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார் நாகரிகர் பெரிதும் இளையர்
செம் பவளம் இவர் வாயின் வண்ணம் தேவர் இவரது உருவம் சொலலில்
அம் பவளத் திரளேயும் ஒப்பர்-அச்சோ ஒருவர் அழகியவா (4)

1762 கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன

பாழி அம் தோளும் ஓர் நான்கு உடையர் பண்டு இவர்_தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் மா கடல் போன்று உளர் கையில் வெய்ய
ஆழி ஒன்று ஏந்தி ஓர் சங்கு பற்றி_அச்சோ ஒருவர் அழகியவா (5)

1763 வெம் சின வேழ மருப்பு ஒசித்த வேந்தர்கொல்? ஏந்திழையார் மனத்தைத்
தஞ்சு உடையாளர்கொல்? யான் அறியேன் தாமரைக் கண்கள் இருந்த ஆறு
கஞ்சனை அஞ்ச முன் கால் விசைத்த காளையர் ஆவர் கண்டார் வணங்கும்
அஞ்சன மா மலையேயும் ஒப்பர்_அச்சோ ஒருவர் அழகியவா (6)

1764 பிணி அவிழ் தாமரை மொட்டு அலர்த்தும் பேர் அருளாளர்கொல்? யான் அறியேன்
பணியும் என் நெஞ்சம் இது என்கொல்? தோழீ பண்டு இவர்_தம்மையும் கண்டறியோம்
அணி கெழு தாமரை அன்ன கண்ணும் அம் கையும் பங்கயம் மேனி வானத்து
அணி கெழு மா முகிலேயும் ஒப்பர்_அச்சோ ஒருவர் அழகியவா (7)

1765 மஞ்சு உயர் மா மதி தீண்ட நீண்ட மாலிருஞ்சோலை மணாளர் வந்து என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் நீர்மலையார்கொல்? நினைக்கமாட்டேன்
மஞ்சு உயர் பொன்மலைமேல் எழுந்த மா முகில் போன்று உளர் வந்து காணீர்
அம் சிறைப் புள்ளும் ஒன்று ஏறி வந்தார்_அச்சோ ஒருவர் அழகியவா (8)

1766 எண் திசையும் எறி நீர்க் கடலும் ஏழ் உலகும் உடனே விழுங்கி
மண்டி ஓர் ஆல் இலைப் பள்ளிகொள்ளும் மாயர்கொல்? மாயம் அறியமாட்டேன்
கொண்டல் நல் மால்வரையேயும் ஒப்பர் கொங்கு அலர் தாமரை கண்ணும் வாயும்
அண்டத்து அமரர் பணிய நின்றார்_அச்சோ ஒருவர் அழகியவா (9)

1767 அன்னமும் கேழலும் மீனும் ஆய ஆதியை நாகை அழகியாரை
கன்னி நல் மா மதிள் மங்கை வேந்தன் காமரு சீர்க் கலிகன்றி குன்றா
இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை ஏழும் இரண்டும் ஓர் ஒன்றும் வல்லார்
மன்னவர் ஆய் உலகு ஆண்டு மீண்டும் வானவர் ஆய் மகிழ்வு எய்துவரே (10)

**Festivals :** Panguni – Brahmothsavam 10 days
Aani - Uthram 10 days
Aadi - Pooram 10 days

**Temple Timings:** 7.30 am to 12.00 pm
5.30 pm to 09.00 pm

**Address :** Arulmigu Soundararaja Perumal Thirukkoil,
Nagapattnam - 611001
Nagapattnam District, Tamil Nadu.

**Phone :** 04365 - 221374

**Location :** 1 km from Nagapattnam Bus Station

**Nearest Railway Station:** Nagapattnam

**Nearest Airport:** Trichy

**Hotels at Nagapattnam :**

Hotel Sea Horse – 04365 – 247047 / 247686

Hotel Sea Gate – 04365 – 263910

Hotel Velankanni MGM – 04365 - 263900

Courtesy: Dinamalar &
Sri Seshadri Swamy
Dr.V Sadagopan Swamy